ஆழ்வார்களின் மங்களாசாசனங்களோ பெரிய மங்களாசாசனங்கள். ஆம் 108 திவ்ய தேசங்களில் 11 ஆழ்வார்களால் 247 பாக்களால் பெரிய மங்களாசாசனம் பெற்றவர் இப்பெருமாள். இராமாயண காலத்திற்கும் முற்பட்டு, இப்பூமிக்கு வந்த பெருமாள் இவரென்றால் இவரின் தொன்மை பற்றி ஆராய்வது பெரிய ஆய்வு. அப்பேற்பட்ட தொன்மையான பெருமாள் தமிழகத்தில் இங்கு வந்து பள்ளி கொள்ள விரும்பினாரென்றால் அது பெரிய விஷயம். அம்மம்மா இங்கு எல்லாமே பெரியவைகள்.

11) திருப்பாணாழ்வார் தாம் தாழ்குலத்தில் பிறந்தோம் என்பதற்காக திருவரங்கத்திற்கு உட்செல்ல மனம் கூசி தினந்தோறும் தென் திருக்காவேரியின் கரையிலிருந்து திருவரங்கனை நோக்கிப் பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார். ஒருநாள் திருவரங்கப்பனுக்கு ஆராதனை புரியும் லோகசாரங்க முனிவர் என்பார் தென் காவிரியில் திருவரங்கநாதனின் திருமஞ்சணத்திற்கு காவிரித் தண்ணீரை முகந்து கொண்டு செல்ல வந்து கொண்டிருக்கும் போது தென் காவிரிக் கரைமீது நின்று கொண்டு திருப்பாணாழ்வார் மெய்மறந்து பாடிக்கொண்டிருந்தார். இவரைக் கண்ட லோகசாரங்க முனிவர் கையை தட்டி ஏ, பாணனே அப்பால் செல்க என்று கூறினாராம். தம்மை மறந்த நிலையில் எம்பெருமானிடம் ஈடுபட்டிருந்த திருப்பாணரின் செவிகளில் கையொலி சத்தம் கேட்க வில்லை. தன் நிலையினின்றும் பிறழாது மனமுருகி பாடிக் கொண்டேயிருந்தார். இதைக்கண்ட லோகசாரங்கர்

